# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 16.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 8198/SCIC/2023

திரு.A.சாகுல் அமீது த/பெ.அப்துல் முகமது
24/14, கலீப் நகர் 1ம் வீதி மேல்முறையீட்டாளர்
புதுக்கோட்டை - 622 001.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
திருவாரூர்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 25.01.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 01.03.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 13.03.2023 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 02.05.2023 |
| 5. | ஆணையத்தின் அறிவிப்பு | 31.07.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.11.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 03.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "ஆவண எண்.3344/2010-க்கான ஆவண பதிவினை ரத்து செய்ய வேண்டி ராஜ்கபூர் என்பவர் புகார் மனு அளித்துள்ள நிலையில் (அ) மேற்கண்ட மனுவினை அளிக்க ராஜ்கபூருக்கான உரிமை குறித்து மாவட்ட பதிவாளர் ஆய்வு செய்த ஆவணத்தின் பெயர் மற்றும் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் தரவும்" என்பன போன்று 15 (பதினைந்து (உட்பிரிவுகளுடன்)) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (16/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.க.செந்தில்குமார், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), திருவாரூர் மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 01/03/2023 தேதியிட்டும் மீண்டும் 19/11/2024 தேதியிட்டு இனவாரியாகவும் தகவல்களை அனுப்பியிருப்பதாகத் தெரிவித்ததோடு, மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக மாவட்டப் பதிவாளர் 28/12/2022 தேதியிட்டு ஆணை பிறப்பித்துள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், அளிக்கப்பட்ட தகவலில் தான் மனநிறைவு அடையவில்லை என்றதோடு, தனது எழுத்துப்பூர்வமான ஆட்சேபணை கடிதத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். விசாரணையின்போது மேற்சொன்ன மனுதாரரின் ஆட்சேபணை கடிதத்தின் நகல், பொதுத் தகவல் அலுவலரிடம் அளிக்கப்பட்டது. மனுதாரர் எழுப்பியுள்ள ஆட்சேபணை கடிதத்தின் அடிப்படையில், மனுதாரருக்கு ஆவணங்களின்படியான சரியான தகவல்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர் மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**3. மேலும், ஆணையத்தின் முன உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரரின் 13/03/2023 தேதியிட்ட பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு அப்போதைய (13/03/2023 தேதிய) மேல்முறையீட்டு அலுவலர்/ துணைப் பதிவுத்துறைத் தலைவர் திரு.V.A.ஆனந்த், தஞ்சாவூர் மண்டலம் (தற்போது), துணைப் பதிவுத்துறைத் தலைவர், மதுரை மண்டலம் அவர்கள் மனுதாரருக்கு எவ்வித தகவலும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட திரு. திரு.V.A.ஆனந்த். துணைப் பதிவுத்துறைத் தலைவர் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் அவர் நேரடியாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8198/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
திருவாரூர்.

2. திரு.V.A. ஆனந்த்
(முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்/)
துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
மதுரை மண்டலம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.A.சாகுல் அமீது த/பெ.அப்துல் முகமது
24/14, கலீப் நகர் 1ம் வீதி
புதுக்கோட்டை - 622 001.

நகல்.

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-28.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)

RG/PC